Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 19 செவ்வாய்க்கிழமை (02.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 134

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# படைத்தரப்பில் தீய சக்திகள்

# அரசு கவனிப்பதாக இல்லை!

## கண்காணிப்புக்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரச படைகளில் உள்ள விஷமிகள் குறித்து அரசாங்கம் அவதானமாக இருக்க வில்லையென இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.**

இது தொடர்பில் போர்நிறுத்தக் கண்கா ணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ப்ஸ் டொடிட்டர் தெரிவித்திருப்பதாவது,

அரச படைகளில் உள்ள சில சக்திகளி னால் மேற்கொள்ளப்படுகின்ற நீதிக்குப்புறம் பான படுகொலைகள் தொடர்பில் நாம் எச்ச ரித்தோம்.

அரசாங்கத்துடன் இணைந்து அப் படு கொலைகள் நிகழ்த்தப்பட்டதாக அர்த்தம் இல்லை. அதாவது அரச படைகளின் சில விஷம சக்திகள் இருப்பது குறித்து அரசாங் கம் அவதானமாக இருக்கவில்லை என்று தான் நாம் கூறினோம்.

இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பினோம். பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை நேற்று சந்தித்து இது தொடர்பில் விவாதித்தோம்.

எமது கருத்தானது ஒட்டு மொத்தப்படை கள் குறித்தது அல்ல. கடற்படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதால் குண்டு வீசப்பட்டதாக அரசாங்கம் கூறுகிறது.

ஆனால் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாகக் கூறுவதற்கு எதுவித ஆதார மும் இல்லை. கொழும்பில் இடம்பெற்ற தற் கொலைத் தாக்குதலை கண்காணிப்புக்குழு கண்டனம் செய்யவில்லை என்று கூறுவது தவறானது.

விசாரணைகள் இப்போது தான் தொடங் கியுள்ளதால் யாரையும் குற்றஞ்சாட்ட முடி யாது என்று (08 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று நடந்த கைக்குண்டுவீச்சுக்கள்...

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நேற்றை தினம் பரவ லாக கைக்குண்டுத்தாக்குதல்களும் துப்பாக் கிச்சூட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

### புத்தூர்ச்சந்தியில்...

மீசாலை புத்தூர்ச்சந்தியில் நேற்றைய தினம் இராணுவ வாகனத்தைநோக்கி கைக் குண்டொன்று வீசப்பட்டது.

இதில் இராணுவவாகனம் சேதமடைந்த துடன் மூன்று படையினர் காயமடைந்தனர்.

### கொக்குவிலில்...

கொக்குவில் குளப்பிட்டிச் சந்திப்பகுதியில் உள்ள இராணுவக்காவலரணில் கைக்குண் டொன்று வெடித்ததில் மூன்று படையினர் படுகாயமடைந்தனர்.

படையினரின் கைக்குண்டே தவறுதலாக கீழேவீழ்ந்து வெடித்ததாக உறுதிப் படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

### நாச்சிமார் கோயிலடியில்...

வண்ணை நாச்சிமார் கோயிலடியில் நேற்று மாலை 6.30 மணியளவில் படை யினர் மீது இனந்தெரியாதவர்கள் துப்பாக் கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

இதில் படைச்சிப்பாய் ஒருவர் படுகாயம டைந்தார். இதையடுத்து படையினர் தாக்கு தல் நடத்தியவர்களை நோக்கி துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தாகவும் தெரிவிக்கப்படு கிறது.

இதனால், அப் பகுதியில் பதற்றம் நில்வி யதுடன் படையினர் சுற்றிவளைத்துத் தேடு தல் நடத்தினர். (ந-4)

## திருமலையில் கிளைமோர்த்தாக்குதல் 2 கடற்படை; 4 பொதுமக்கள் பலி!

திருகோணமலை நகரில் நேற்றுக்காலை 9.45 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் இரண்டு கடற்படையினர் மற் றும் நாலு தமிழர்கள் உயிரிழந்ததுடன் மூன்று கடற்படையினரும் இரண்டு பொதுமக்களும் படுகாயமடைந்துள்ளனர்.

திருகோணமலை நகரில் வித்தியாலயம் வீதியில் இக் கிளைமோர்த்தாக்குதல் நிகழ்ந் தது. வீதியோரத்தில் நிறுத்தப்பட்ட மிதி வண் டியில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர்க் குண்டு வெடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் முச்சக்கர வண்டியில் பயணம் செய்த சித்திரா துரைநாயகம் , அவரது பிள்ளைக்ளான வனிதா,துளசிநாதன் மற் றும் ஓட்டோசாரதி பிரபா ஆகியோர் உயிரிழந் தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள் ளது. இக் குண்டு வெடிப்பையடுத்து திருமலை நகரில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது. (ந-5)

## கருணா குழுவிற்கு உதவ வந்த இராணுவத்தினரில் ஐவர் பலி

### விடுதலைப்புலிகள் அறிவிப்பு

(மட்டக்களப்பு)

வெலிக்கந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலின்போது துணை இராணுவக்குழு வினரை மீட்க முயன்ற ஐந்து இராணுவத்தி னரும் கொல்லப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

வெலிக்கந்தைத் தாக்குதலை முடித்த பின்னர் நேற்று முன்தினம் பிற்பகல் புலிக ளின் முன்னரங்கக்காவல் நிலைகளை புலி களின் சிறப்பு அதிரடிப்படையினர் சென்ற டைந்தனர்.துணை இராணுவக்குழுவினர் மீதான புலிகளின் தாக்குதலின்போது அவர் களைக் காப்பாற்ற முயன்ற குருநாகல் கல் வத்தையைச்சேர்ந்த இராணுவக்கப்டன் லியோட் பெர்ணாண்டோ உட்பட ஐந்து படையி னர் கொல்லப்பட்டதாக மட்டக்களப்புமாவட்ட விடுத லைப்புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் நான்கு படையினர் படு காயமடைந்த நிலையிலும் தப்பியோடியதா கவும் தெரிய வந்துள்ளது. (ந-5)

## துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான வேலணைப் பெண் நேற்று மரணம்

(வேலணை)

வேலணைப் பகுதியில் நேற்று முன் தினம் இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட பெண் நேற்று உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் வேலணையைச் சேர்ந்த ஈ.போதினி (வயது 29) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ந-4)

## அல்லைப்பிட்டியில் முதியவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் கடற்படை மீதான கிளைமோர்த்தாக்குதலையடுத்து கடற்படை யினர் சிலர் முதியவர் ஒருவரை சுட்டுக்கொலை செய்தனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் அல் லைப்பிட்டியில் நடந்துள்ளது. அல்லைப்பிட்டி 4ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த இராசமணி சங்கரப்பிள்ளை (வயது 74) என்ற முதிய வரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் தனக்கும் புலிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை தன்னைச்சுடவேண்டாம் என கெஞ்சிக்கேட்டபோதும் கடற்படையினர் தலையில் சுட்டதாக உறவினர்கள் தெரிவித் தனர்.

பிரஸ்தாப நபரின் வீட்டுக்கு அருகாமை யில் இருந்த கடற்படையினர் நால்வர் இரவு 8மணி அளவில் வீட்டிற்குள் புகுந்து வீட்டில் உள்ளவர்களைத் துன்புறுத்திய பின்னர் பிரஸ்தாப நபரை சுட்டனர்.

அத்துடன் காயமடைந்தவயோதிபரை வைத் தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு முயற்சி செய்த அவரது மருமகனையும் கடற்படை யினர் கடுமையாகத்தாக்கினர் என உறவினர் கள் கூறினார்கள். (08 ஆம் பக்கம் பார்க்க)

## சுதுமலையில் திருட்டு

## பொதுமக்களால் தாக்கப்பட்ட நபர் நேற்று உயிரிழந்தார்

(யாழ்ப்பாணம்)

சுதுமலைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தின்போது பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு தாக் கப்பட்ட நபர் நேற்றுக் காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் அதிகாலை வேளை ஹயஸ் வான் ஒன்றில் சென்ற திருட்டுக் கோஷ்டி ஒன்று சுதுமலை அம்மன் கோவி லுக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் புகுந்து திருட முயன்றது.

இதன் போது விழிப்படைந்த பொதுமக் கள் திருடர்களில் ஒருவரை மடக்கிப்பிடித்துத் தாக்கினர். இதில் காயமடைந்த நபர் மானிப் பாய் பொலிஸாரால் யாழ்.போதனா வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சை பயனளிக்காத நிலையில் பிரஸ் தாப நபர் நேற்றுக்காலை உயிரிழந்தார். (ந-4)

உள்ளே
கணனிக் கல்விப் பகுதி

# 1954 ஆம் ஆண்டு ஐந்தாவது

# உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

| திகதி | கிண்ணம்கைப் பற்றிய நாடு | இரண்டாவது இடம் | 3ஆவது இடம் | நடாத்திய நாடு |
|---|---|---|---|---|
| ஜுன் 16 – ஜுலை04 | மேற்கு ஜேர்மனி | ஹங்கேரி | ஆஸ்திரியா | சுவிஸ்சர்லாந்து |



ஐந்தாவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை ஐரோப்பிய நாடுகளில் நடாத்த வேண்டிய சூழ்நிலை காரணமாக சுவிஸ்சர்லாந்தில் இப் போட்டி நடத்தப்பட்டது.

இந்த உலகக்கிண்ணத்தை உணர்ச்சி மிக்க உயர் வெற்றியாக ஜேர்மனிய ஐக்கிய குடியரசு கைப்பற்றியது.

ஹங்கேரி அணி சிறப்பான ஓர் அணியாகத் திகழ்ந்தது. அந்த அணியில் புஷ்கால், போஸிக், ஹொரக்ஸ்ஸ் மற்றும் ஹைட் குரி ஆகிய வீரர்கள் 28 சர்வதேச போட்டிகளிலும், ஒலிம்பிக் போட்டியில் சிறப்பாக ஜொலித்த அனுபவ வீரர்களும் விளையாடினார்கள்.

ஹங்கேரி அணி முதல் சுற்றுப் போட்டிகளில் மேற்கு ஜேர்மனியை 8-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றிருந்த போதிலும் இறுதிப்போட்டியில் மேற்கு ஜேர்மனிய அணி ஹங்கேரி அணியை 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று உலகக் கிண்ணத்தை தனதாக்கியது.

## முதல் சுற்றுப்போட்டிகளின் முடிவுகள்

| குழு ஏ | போட்டி | வெற்றி | தோல்வி | சமநிலை |
|---|---|---|---|---|
| பிரேஸில் | 2 | 1 | 0 | 1 |
| யூக்கோஸ்லாவியா | 2 | 1 | 0 | 1 |
| பிரான்ஸ் | 2 | 1 | 1 | 0 |
| மெக்சிக்கோ | 2 | 0 | 2 | 0 |
| குழு பீ | | | | |
| ஹங்கேரி | 2 | 2 | 0 | 0 |
| துருக்கி | 2 | 1 | 1 | 0 |
| ஜேர்மனி | 2 | 1 | 1 | 0 |
| தென்கொரியா | 2 | 0 | 2 | 0 |
| குழு சீ | | | | |
| உருகுவே | 2 | 2 | 0 | 0 |
| ஆஸ்திரியா | 2 | 2 | 0 | 0 |
| செக்கோஸ்லாவியா | 2 | 0 | 2 | 0 |
| குழு டி | | | | |
| இங்கிலாந்து | 2 | 1 | 0 | 1 |
| இத்தாலி | 2 | 1 | 1 | 0 |
| சுவிற்ஸர்லாந் | 2 | 1 | 1 | 0 |
| பெல்ஜியம் | 2 | 0 | 1 | 1 |



### உலகமே ஒன்றிணைந்த பரிமாணம்

ஆரம்ப தெரிவுப் போட்டிகளிற்கு அதிக நாடுகள் போட்டியிட்டன.

ஆசிய ஆபிரிக்க உதைபந்தாட்ட சம்மேளனம் 1954 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டது. இதனால் ஆசிய நாடு (ஜப்பான் மற்றும் கொரியா) மற்றும் ஆபிரிக்க நாடு (எகிப்து) என்பன தெரிவுப் போட்டிகளில் பங்குபற்றியதன் மூலம் உலகமே ஒன்றிணைந்த பரிமாணத்தை வெளிப்படுத்தியது.

முதல் சுற்றுப்போட்டிகளிற்கு 16 அணிகளே தெரிவாகின. தென்னமெரிக்க நாடுகளான உருகுவே, பிரேஸில் மற்றும் மெக்சிக்கோ ஆசிய நாடான கொரியா மற்றும் ஐரோப்பிய நாடுகளை ஆஸ்திரியா, பெல்ஜியம், சிக்கோஸ்லாவியா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஹங்கேரி, ஸ்கொட்லாண்ட், சுவிஸ்சர்லாந்து, துருக்கி, மேற்கு ஜேர்மனி, மற்றும் யூகோஸ்லாவிய அணிகள் பங்குபற்றின.

உயதரத்திலான மைதானங்களை அமைத்து சிறப்பான போட்டிகளை நடாத்திய பெருமை பேஸ்ல், பேர்ன், லேனி சுவிச் மற்றும் ஜெனீவா நகரங்களுக்கே உரியது.

### மாயாஜாலம்

மொத்தம் 24 போட்டிகள் நடைபெற்றது. இதில் 140 கோல்கள் (சராசரியாக ஒரு போட்டியில் 5-38 விகிதத்தில்) அடிக்கப்பட்டது. இந்த அதிக கோல்கள் உலகக்கிண்ண போட்டிகள் வரலாற்றில் சாதனையாகத் திகழ்ந்தது.

ஹங்கேரி அணி இரண்டு வருடங்களுக்கு முன்னதாக ஒலிம்பிக் உதைபந்தாட்டப்போட்டியில் தங்கப் பதக்கத்தை பெற்றது.



இதனை விட இறுதியாக 1954 மே 31 ஆம் திகதிவரை நடைபெற்ற 31 போட்டிகள் 27 போட்டிகளில் வெற்றி பெற்றது. 14 போட்டிகள் சமனிலையில் நிறைவடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

எனவே இந்த ஐந்தாவது உலகக்

R.U.பாலமுருகன்

கிண்ணப் போட்டிகளில் மாயாஜாலமான அணியாக ஹங்கேரி திகழ்ந்தது.

முதல் சுற்றுப் போட்டியில் மேற்கு ஜேர்மனிய அணியை ஹங்கேரி அணியினர் 8-2 என்ற கோல்கணக்கில் வென்றனர்.

அடுத்த போட்டியில் தென்கொரியாவை 9-0 என்ற கோல் கணக்கில் வென்றனர் ஹங்கேரிய அணியினர்.

காலிறுதிப் போட்டிகளிற்கு ஆஸ்திரியா, சுவிற்ஸர்லாந்து, உருகுவே, செக்கோஸ்லாவியா, இங்கிலாந்து, மேற்கு ஜேர்மனி, யூக்கோஸ்லாவியா, ஹங்கேரி, பிரேஸில் ஆகிய அணிகள் தெரிவாகியிருந்தன. எனினும் அரையிறுதிக்கு ஹங்கேரி, உருகுவே, மேற்கு ஜேர்மனி, ஆஸ்திரியா ஆகிய அணிகளே தெரிவாகின.



அரையிறுதிப் போட்டிகளில் வெற்றிபெற்று ஹங்கேரி மற்றும் மேற்கு ஜேர்மன் ஆகிய அணிகள் இறுதிப்போட்டியில் மோதியது.

முதல் சுற்றுப்போட்டியில் மேற்கு ஜேர்மனியை 6 கோல்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய வீரத்துடன் ஹங்கேரி அணி போட்டியின் ஆரம்பத்தில் இரு கோல்களை அடித்தது.

எனினும் மறக்கமுடியாத பத்து நிமிடங்களில் 2 கோல்களை அடித்தது. மேலும் போட்டி நிறைவடைய 6 நிமிடங்கள் உள்ள நிலையில் மேற்கு ஜேர்மனிய வீரர் றான் தலையினால் பந்தை அடித்து மேலும் ஒரு கோலை அடித்தார். இறுதியில் மேற்கு ஜேர்மனி அணி 3-2 என்ற கோல்கணக்கில் ஹங்கேரியை வெற்றி பெற்று உலகக்கிண்ணத்தை கைப்பற்றியது.

1954 ஆம் ஆண்டு ஜுலை 4 ஆம் திகதி மேற்கு ஜேர்மனியினரின் உலகக் கிண்ண கனவு நனவாகியது.

### காலிறுதிப் போட்டி முடிவுகள்

| | | |
|---|---|---|
| ஆஸ்திரியா7 | எதிர் | சுவிற்ஸர்லாந்து5 |
| உருகுவே4 | எதிர் | இங்கிலாந்து2 |
| மேற்குஜேர்மனி 2 | எதிர் | செக்கோஸ்லாவியா 0 |
| ஹங்கேரி4 | எதிர் | பிரேஸில் 2 |

### அரையிறுதி போட்டி முடிவுகள்

| | | |
|---|---|---|
| ஹங்கேரி4 | எதிர் | உருகுவே2 |
| மேற்குஜேர்மனி6 | எதிர் | ஆஸ்திரியா 1 |

### இறுதிப் போட்டி

| | | |
|---|---|---|
| மேற்குஜேர்மனி 3 | எதிர் | ஹங்கேரி 2 |

(வளரும்)

# சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்காது

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்க அனுமதிக்குமாறு செல் காஸ் நிறுவனம் விடுத்துள்ள வேண்டுகோளை நிராகரிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலையை 114 ரூபாவால் அதிகரிக்க அனுமதி வழங்க வேண்டுமென்று அந்த நிறுவனம் அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

உலக சந்தையில் தற்போது நிலவும் விலையின்படி சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றை 540 ரூபாவிற்கு வழங்க முடியுமென நுகர்வோர் அதிகாரசபையின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாகவே செல் காஸ் நிறுவனத்தின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட அதிகார சபையின் தலைவர், சமையல் எரிவாயு விலையை அதிகரிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார். (க-9)

## மதுவிலக்குத் துண்டுப்பிரசுரம்

(ஊர்காவற்றுறை)

யாழ்-மனித முன்னேற்ற நடு நிலையத்தாலும் குருநகர் புனித - யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தையாலும் மதுவிலக்கு பிரசாரம் கடந்த வாரம் யாழ்.நகரில் நடைபெற்றது.

'குடிபோதை இன்றிய வாழ்விற்கு ஓர் வழிகாட்டி' என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளது. (து-72)

# அதிகரித்த கொடுப்பனவுகள் இம்மாதம் முதல் வழங்கப்படும்

(கொழும்பு)

மகாபொல புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் உதவிபெறும் மாணவர்களுக்கான அதிகரித்த கொடுப்பனவுகள் இம்மாதம் முதல் வழங்கப்படவுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைவாக உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் தொகை 500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் ஆற்றல் கூடிய மாணவர்கள் மாதாந்தம் 2 ஆயிரத்து 550 ரூபாவைப் பெறுவார்கள். ஏனையோர் 2 ஆயிரத்து 500 ரூபாவைப் பெற்றுக்கொள்வார்கள்.

இதேவேளை மேலதிக கொடுப்பனவுகளை வழங்குவதற்கு வருடாந்தம் 18 கோடி ரூபாவை செலவிட வேண்டியதாக இருக்குமென மகாபெல புலமைப்பரிசில் நிதியம் தெரிவித்துள்ளது.

தற்போது 30 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் கொடுப்பனவை பெற்றுக் கொடுப்பதற்காக வருடாந்தம் 78 கோடி ரூபா செலவிடப்படுகிறதென நிதியத்தின் பேச்சாளர் குறிப்பிட்டார். (க-7)

## மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்திருக்கும் மூத்த விநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் வியாழக் கிழமை மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

காலை 6.41 மணிக்கும் 8.30 மணிக்கு உட்பட்ட சுபமூர்த்தத்தில் கும்பாபிஷேக விழா நடைபெறவுள்ளது. (க)

# தமிழர்களே ஒரு கையில் தொழில் கருவியையும் மறு கையில் ஆயுதத்தையும் ஏந்துங்கள்!

## க.வே.பாலகுமாரன் அழைப்பு

**வியட்நாம் வரலாற்றைப் போல் ஒரு கையில் தொழில் கருவியையும் மறுகையில் ஆயுதத்தையும் ஏந்தும் காலம் வந்துவிட்டது என்று தமிழ் மக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் அழைப்பு விடுத்துள்ளார்.**

தமிழ்ழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான புலிகளின் அரசியல் அரங்கம் நிகழ்வில் கடந்த சனிக்கிழமை உரையாற்றும்



போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

சிங்களம் எப்போதும் எங்களோடு பேசும் மொழி. இராணுவ படுகொலை மொழி என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த நிரூபணத்தின் ஊடே மூன்று விடயங்களை முன்வைக்கிறோம். முதலாவது மஹிந்தவின் உத்தி என்ன என்பது தெளிவாகத் தெரிகிறது.போருக்கு முன்னைய சிறிய போரை அல்லது நிழல் போரை நடத்த தயாராகிவிட்டார். அவர் சொன்னது போல மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை அவர் இடைநிறுத்தி யிருக்கிறார் என்ற அளவில் அவரது போர் உத்தி நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆகவே போரை நடத்துவதற்கு முன்னர் இன்னொரு சிறியபோரை நடத்த அவர் ஆயத்தமாகிவிட்டார் என்பது தெளிவாகிறது.

இரண்டாவது வழமைபோல் இந்தப் படுகொலைகளைப் பார்த்து உலகம் மௌனம் காத்தது எங்களை மனம் நோக வைத்தது. சர்வதேசத்தையே கண்டனம் செய்து விடுதலைப் புலிகள் வெளியிட்டிருந்த அறிக்கையை மிக முக்கியத்துவம் கொடுத்து சர்வதேச ஊடகங்கள் யாவும் வெளியிட்டன என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இனிமேல் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வேலையை உலகம் தொடங்கிவிட்டது. சர்வதேச சமூகத்தினர் புலிகள் மேல் தாங்கள் அழுத்தம் கொடுக்கப் போகிறோம் என்பதை மௌனம் காத்ததன் மூலம் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அதேவேளை சம்பூர் படுகொலைகளைத் தாங்கள் கவனிக்காமல் இல்லை என்பதற்காக அறிக்கையையும் வெளியிட்டுள்ளனர்.

தொடக்கத்தில் ஒடுக்கப்படுகின்ற மக்கள் மீது கருணை காட்டாமல் ஒடுக்குகிற அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கான போராடுகின்ற இயக்கத்தை கண்டனம் செய்தது. இப்போது இருதரப்புக்கும் கண்டனம் செய்ய முனைந்துள்ளது. ஒடுக்குகின்ற அணியையும் ஒடுக்கப்படுகிற அணியையும், ஒரே தராசில் வைத்து கண்டனம் செய்வது நம்ப முடியாத ஒரு செய்தியாக உள்ளது.

எது சரி? எது தவறு என்பதை உலகத்தால் கணிக்க முடியாது இருப்பது கூட எங்களுக்குக் கிடைத்த வெற்றியாக நாங்கள் பார்க்கிறோம். ஆக, விரைவில் உலகம் ஒரு முடிவை எடுக்க வேண்டும். ஒரு தரப்பை உலகம் கண்டனம் செய்ய வேண்டும். அது எந்தத் தரப்பு என்பது காலம் சொல்லப் போகின்ற பதிலாக இருக்கும். அதற்காகத் தான் நாங்கள் நீண்ட மௌனத்தை காத்துக் கொண்டு வருகிறோம்.

### மக்கள் போராளிகளாக மாற வேண்டும்

இந்த இராணுவ நடவடிக்கை மூலம் இன்னொரு முக்கிய செய்தியை எங்கள் மக்களுக்கு மஹிந்த சொல்லியிருக்கின்றார். மக்களுக்கும் போராளிகளுக்கும் இடையில் எதுவித வேறுபாட்டையும் இனி காணப்போவதில்லை என்பதை மஹிந்த விளக்கியுள்ளார்.

அதாவது மக்கள் ஒரு நிலையில் போராளியாக மாற வேண்டும் என்பதுதான் மஹிந்தவின் செய்தி. அப்படியானால் மக்கள் எப்போது போராளியாவார்கள்? மஹிந்த நினைக்கின்ற போது தான் நடக்கும். ஆக மக்கள் ஒரு புதிய பரிமாணத்துக்குப் போக வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறர்கள். மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள-மக்கள் போராளிகளாக மாறி - மக்கள் படைகளைக் கட்டி - மக்கள் சேனைகளை உருவாக்கி யுத்தம் நடத்தி வென்ற வரலாறு வியட்நாமில் நடந்திருக்கிறது.

வியட்நாம் பற்றி ஏற்கனவே நாம் பேசியிருந்தாலும் இப்போதும் சில கருத்துக்களை முன்வைக்கிறோம். வியட்நாமின் பழமொழி அல்லது புதுமொழியாக முன்னர் நாம் குறிப்பிட்டிருந்தோம். போரிடுங்கள் பேசுங்கள், பேசுங்கள் போரிடுங்கள் என்கின்ற மொழிக்கு ஊடாக வியட்நாமின் வரலாறு நடந்த விதமும் வெகுநுணுக்கமாகவும் இறுக்கமாகவும் இராணுவ இராஜதந்திர அரசியல் வழிமுறைகளை ஒன்றிணைத்த மூலோபாயத்தை சுமார் 10ஆண்டுகாலம். கடைப்பிடித்தனர்.

குறிப்பாக 1965ஆம் ஆண்டு முதல் 1973 ஆம் ஆண்டுக்கு இடையில் இந்த உத்திகளைக் கடைப்பிடித்து விடுதலை ஒரு நாளில் வருவதில்லை. ஆனால் நீண்ட நாட் களுக்குப் பின் அது ஒருநாள் வரும் என்ற செய்தியை 1973ஆம் ஆண்டு ஒப்பந்தம் மற்றும் 1975ஆம் ஆண்டு படையெடுப்போடு வியட்நாம் நிரூபித்தது.

### பேச்சோடு போர் போரோடு பேச்சு

10வருடகால மாக பேச்சும் போருமாக கழிந்த வரலாறு இன்றைக்கு தமிழீழப் போராட்ட வரலாற்றிலும் உருவாகிறது. இனி மேல் பேச்சோடு போருமாக போரோடு பேச்சுமாக நடக்கப் போகிறது என்பதை நாங்கள் முன் கூட்டியே அறிவிக் கிறோம்.

இறுதியில் வியட்நாம், இராணுவ வழிமூலம் தனது வெற்றியைப் பெற்றுக் கொண்டது என்பதையும் நாம் இங்கே மனதில் கொள்ளவேண்டும்.

போரின் காரணமாக மிக உச்சக்கட்டமான இழப்பைச் சந்தித்த நாடு வியட்நாம் உதாரணமாக 1965 ஆம் ஆண்டுக்கும் 1973 ஆம் ஆண்டுக்கும் இடையில் 14மில்லியன் தொன் பீரங்கிக் குண்டுகள், வான்வழிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது இரண்டாம் உலகப் போரில் பாவித்ததை விட 3மடங்கு அதிகமாகும். இதேபோல் அண்மையில் எங்கள் சம்பூரில் குறிப்பிட்ட தொகையான தொன் வெடிபொருட்கள் எங்கள் மக்கள் மீது கொட்டப்பட்டுள்ளது. வியட்நாமிய மக்களின் மரபு ஒன்றை நாம் நினைவில் கொள்வோம். வியட்நாமிய வரலாற்றில் அம் மக்கள் மூன்று விடயங்களை முக்கியமாக கொள்கிறார்கள். வீடு, நிலம் மற்றும் இறந்தவர்களின் நினைவிடங்கள் ஆகியவற்றில் எதிரி எந்த வகையிலும் உள்நுழைய அனுமதிக்கக் கூடாது என்பது அவர்களது திடமான முடிவு. வீட்டில் வாழும்போது உயிரோடு வாழவேண்டும். உயிரற்ற நிலையில் நினைவிடங்களில் வாழ வேண்டும் என்பதை புனிதமாகக் கொண்டு இவற்றில் ஒருவகையிலும் ஆக்கிரமிப்பாளன் கால் வைக்கவிடக்கூடாது என்கின்ற அடிப்படையில் வியட்நாமிய மக்களின் போர் மரபு உருவானது. அதேவகையில் உலக மக்களின் அனுபங்களிலிருந்தும் தனக்கு வேண்டியதை வியட்நாம் கற்றுக் கொண்டுள்ளது. ஜெனரல் ஜியாப் என்பவர் வியட்நாமின் முக்கிய தளபதி மக்கள் சேனைகளை கட்டிய அனுபவமுள்ளவர். அவரது நூல் ஒன்றின் கருத்துகளை முன் வைக்கிறோம். புரட்சிகர மக்களை ஆயுதபாணிகளாக்குதலும் மக்கள் படையும் என்று 1960ஆம் ஆண்டுகளில் மார்க்சீச சிந்தனைகளின் அடிப்படையில் வர்க்கப்போராட்டத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டவைகளை எங்களுக்குப் பொருத்தமானவற்றை தெரிவு செய்து எங்கள் மக்கள் மனதில் கொள்வதற்காக சிலவற்றைத் தருகிறோம்.

ஆயுதமேந்திய எழுச்சி யிலும் புரட்சிகர போரிலும் அதேபோல் மக்கள் அனைவரும் பங்குகொள்ளும் தேசிய பாதுகாப்பிலும் தேசிய விடுதலைப்போரிலும் அது போல் தாய் நாட்டை பாதுகாக்கும் போரிலும் வலுமை மிக்க ஒரு மக்கள் சேனையை கட்டும்போதே பரந்துபட்ட மக்கள் திரளினையும் ஆயுத பா ணிகளாக்கவேண்டும்.

மக்களின் ஆயுதப் படைகளை மக்கள் சேனைகளின் அத்திபாரமாக கருதவேண்டும் மக்கள் சேனையை மக்கள் படையின் கூறாக கருதவேண்டும் என்கிறார்.

### மக்கள்படை

இங்கே அவர் மக்கள் சேனை என்பதை நிரந்தர இராணுவத்தையும் மக்களின் ஆயுதப் படை என்பதை மக்கள் பங்கு பற்றக் கூடியதையும் கருத்தில் கொண்டு தெரிவித்துள்ளார் . இத்தகைய முடிவுகளை எடுத்து வியட்நாமின் வரலாறு மாற்றியமைக்கப் பட்டது. வியட்நாமின் மக்கள் சேனை எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதைச் சொல்கிறோம். வியட்நாமின் மக்கள் படை என்பது தற்காப்புப் படைகளும் குடிப் படைகளும் கொரில்லா படைகளுமாக வளர்ச்சியடைந்து இறுதியில் மக்களின் ஆயுதப் படைகள் மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டன. முதலாவது பிரதான படை என்று சொல்லக்கூடிய நிரந்தரப் படை.

இரண்டாவது பிரதேச படை என்பது பிரதேசங்களைக் காப்பதற்கான படை. மூன்றாவது குடிப் படை என்று சொல்லக் கூடிய மக்கள் அனைவரும் பங்கு பற்றக் கூடிய ஒரு படையணியாக உருவாக்கப்பட்டது.

இதில் இராணுவ ரீதியாக நிரந்தர படையணி என்பது மிக முக்கியமானது. நாடு முழுவதும் முக்கியபோர் முனைககளில் பயன்படுத்தப்பட்ட இயங்கு படை இதுதான். எதிரியின் சேனையைக் குறிப்பாக இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இயங்கு படையை நிர்மூலமாக்குதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை இந்தப் படை மேற்கொண்டது. ஒவ்வொரு போர் முனைகளிலிருந்தும் ஒவ்வொரு திட்டவட்டமான நிலைமைகள் கடமைகள் ஆகியவற்றிற்கேற்ப பிரதேச படைகள் கட்டப்பட்டன.இதை ஜியாப்பின் வார்த்தைகளில் கூறினால் பிரதேசங்களில் நடத்தப்படும் ஆயுதப் போராட்டத்தின் அடிப்படையாக அவை அமைகின்றன. வலுவான படை அலகுகளாக ஒழுங்கமைக்கப்பட்ட பிரதேச படைகள் போர் நடவடிக்கைகளில் தமது படைகளைத் தேவைக்கு ஏற்ப தேவையானஇடங்களில் ஒன்று குவித்தும் பரவலாக்கியும்... என்று அந்த வரிகள் செல்கின்றன.

குடிப்படைகள் என்று சொல்லப்படு கின்ற மக்களினது ஆயுதப் படைகள் குறித்தும் மிக விரிவாக ஜியாப் கூறியுள்ளார். இன்று எங்கள் நிலையில் போராளிகளாக மக்கள் மாறவேண்டுமாயின் மக்களை ஆயுதமாக்குதல் சேனைகளில் இணைத்தல் என்ற அடிப்படையில் செயற்பட வேண்டிய கால கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம் . இந்த வகையில் வியட்நாமின் அனுபவங்கள் எங்களுக்கு பயன்படும். தமிழ் மக்கள் வியட்நாமிய மக்களினது சாதனைகள் பற்றி அறிவதும் முக்கியமானது. அந்த வகையிலும் ஜியாப்பின் கருத்துக்களைத் தொடர்து வாசிக்கிறேன். போரில் குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் பெரும் பாத்திரத்தை வகித்தன. இந்த தற்காப்புப் படைகளும் குடிப்படைகளும் தான் தற்போது நாங்கள் அமைக்க விரும்புகிறது மக்கள் படையணியின் வியட்நாம் மரபாக இருக்கிறது.

### தொழில் கருவி ஒரு கையில் துப்பாக்கிகள் மறுகையில்

கலப்பை ஒரு கையிலும் ரைபிள் ஒரு கையிலும் சுற்றியல் ஒரு கையிலும் துப்பாக்கி ஒரு கையிலும் என்ற இயக்கங்களில் இளைஞர்களும் முதியவர்களும் ஆடவரும் பெண்டிரும் கிராமங்களிலும் நகரங்களிலும் சமவெளிப் பகுதிகளிலும் மலைகளி லும் எதிரி விமானங்களை சுட்டு விழுத்துவதிலும் செயல்நுட்பத்துடன் பங்குபற்றினர். அவர்கள் தாழ்வாகப் பறக்கும் விமானங் களைச் சுட்டுவீழ்த்தும் துப்பாக்கிகளை கிராமப்புறங்களில் ஆங்காங்கே ஒன்றுக் கொன்று தொடர்புள்ள வலைப்பின்னல் போல் அமைத்தனர். குடிமக்களையும் உற்பத்தியையும் பாதுகாத்து எல்லா உயரங்களிலும் எல்லாத் திசைகளிலும் பறக்கின்ற எதிரிகளின் விமானங்களைச் சுட்டுவீழ்த்தும் துப்பாக்கிகள் அடங்கிய பின்னல் அமைப்பை உருவாக்குவதில் விமான எதிர்ப்பு படையுடனும் விமானப் படையுடனும் நெருக்கமாக ஒத்துழைத்தனர்.

இவ்வாறாக விரிந்துசெல் லும் வசனங்களுக்கூடாக இங்கே நாம் அறியவேண்டியது தற்போது இரண்டு கைகள் உள்ளஎங்கள் மக்கள் ஒரு கையில் தொழிலுக்கான கருவிகளையும் மறுகையில் ஆயுதத்தையும் ஏந்த வேண்டிய காலம் வந்துவிட்டது.

வியட்நாம் மக்களினது சாதனைகளை வாசித்தால் இன்றைக்கு நம்ப முடியா ததாக இருக்கக் கூடும். இருந்த போதும் சமாதான காலத்திற் கூட ாக உருவாக்கப்பட்ட படை அரசியல் படை என்று சொல்லப்பட்டது. அந்த அரசியல் படையை சமாதான காலத்திலிருந்து போர் காலத்திற்கு தள்ளப்பட்ட போது எங்கள் தமிழ் ஈழம் போல் தற்காப்புப் படை நிலையிலி ருந்து போரிடும் படையாக மாற்றிய வளர்ச்சியையும் நாங்கள் பார்க்கிறோம்.

தமிழீழத்தில் நீண்டகாலமாக போர் மரபு இருந்தது. இடையில் மறுக்கப்பட்டு விட்டது. ஆனால் வியட்நாமில் பல நூற்றாண்டு காலமாக சீனாவுக்கு எதிராக-ஜப்பானுக்கு எதிராக-பிரான்சுக்கு எதிராக-அமெரிக்காவுக்கு எதிராக என்ற போர் படையணி மரபு இங்கு இல்லாவிட்டாலும் கூட வியட்நாமிய அனுபவங்களை இங்கே நாம் பயன்படுத்திக் கொள்ளக் கூடியதா கஇருக்கிறது.

நாங்கள் வியட்நாம் அனுபவத்திற் கூடாக விடுதலை வலயங்கள் அல்லது புரட்சிகர தளங்கள் அமைக்கப் பட்டதுபோல் இன்று தமிழீழத்தில் வன்னிஎன்பது விடுதலை வலய மாக -புரட்சி தளமாக- மையமாக இருப்பதால் எங்கள் மக்கள் இக் கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டும். ஜியாப் சொன் னது போல் அவர் புரட்சி என்கி றார்... நாம் விடுதலை என்று சொல்லலாம்.

விடுதலையின் அனைத்துக் கடமைகளிலும் மக்களே அதற்கு திடமான அடிப்படையாகஅமைகிறார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.மக்களின் அரசியல் படைகளே ஆயுதப் படைகளின் திடமானதளமாகும். மக்களின் ஆயுதப் படைகளே புரட்சிச் சேனையின் திடமான அடிப்படைத் தளமாகும் என்கிற செய்திக்கூடாக நாம் இங்கே ஒரு கட்டுமானத்தைக் கட்டவேண்டியது அவசியமாகிறது.

ஏற்கனவே எங்கள் விடுதலை அணியில் நிரந்தர படைய ணியும் அதற்குத் துணையான அணியும் கட்டப்பட்டுள்ளது. இப்போது மூன்றாம் படையணி ஒன்றை அற்புதமாக நேர்த்தியாக கட்ட வேண்டிய நிலையிலுள்ளோம். அந்த வகையில் மக்களை போர் உத்திகளுக்கூடாக போரணியாக்கி போர் உத்திகளை மக்களுக்கும் கற்க வைத்து ஒரு மகத்தான அரசியல் படையையும் வலிமை மிக்க ஆயுதப் படையையும் ஒன்றிணைக்க வேண்டிய காலகட்டத்தில் நாங்கள் வாழ்கிறோம்.

இதைத் தான் மஹிந்தவின் இராணுவ உத்திகளும் குண்டுவீச்சுகளும் சர்வதேச அழுத்தங் களும் உருவாக்கியுள்ளன. தொடர்ந்து வரக்கூடிய இந்த மிகப் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கிற மிகப்பெரிய கவசமாக அற்புதமான ஒரு படையாற்றலாக மக்கள் படையணியை எங்கள் தேசத்திற்கு ஏற்ற வகையில் உருவாக்கும் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஆயுத்தமாக வேண்டும் என்றார். (கு)




## 116 வயது மூதாட்டி

மருத்துவத்துறையில் ஏற்பட்டிருக்கும் அளப்பரிய வளர்ச்சியால் உலக மக்களின் சராசரி வயது அதிகரித்துக் கொண்டே வருகிறது.

பொதுவாக நூறு வயது வரை வாழ்பவர்கள் அதிசயமாகக் காணப்படும் இவ்வேளையில் 116 வயது வரை வாழ்ந்து அதிக வயது வரை வாழ்ந்த பெண்மணி என்ற பெருமையை ஈகுவாடார் நாட்டைச் சேர்ந்த மரியா எஸ்தர் டீ கேபோவில்லா என்ற பெண் பெற்றிருக்கிறார்.

1889ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி மரியா எஸ்தர் டீ கேபோவில்லா பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சில நிமிடங்களில்...



ஒரு உயரமான கட்டடத்தில் 100 படி, 200 படிகளை ஏறிச் செல்வதற்குள் மூச்சு வாங்கி விடும். மேலும் அதை கடப்பதற்குச் சில பல நிமிடங்கள் ஆகிவிடும்.

ஆனால் அவுஸ்திரேலியா நாட்டைச்சேர்ந்த ஒருவர் அமெரிக்காவில் எம்பயர் ஸ்டேட் கட்டத்தில் உள்ள 1576 படிகளை எவரது உதவியும் இல்லாமல் 9 நிமிடம் 33 நொடியில் ஏறிச் சாதனை படைத்திருக்கிறார். அந்தச் சாதனையாளரின் பெயர் பால்கிரேக் 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இந்தச் சாதனையை நிகழ்த்திக் காட்டினார்.

## மிகச் சிறிய தொலைபேசி

பொதுவாக எலக்ட்ரோனிக் பொருட்களை பெரிதாகத் தயாரிக்கும் போது அவ்வளவாக சிரமம் இருப்பதில்லை. சிறியதாக உருவாக்குவது என்பது தான் சற்றுச் சிரமமான காரியம்.

ஆனால் அதைச் சவாலாக எடுத்துக்கொண்டு மிகச்சிறிய தொலைபேசியைக் கண்டுபிடித்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்திருக்கிறார் ஜான் பீட்டர் குருத்விஷ்.


போலந்து நாட்டைச் சேர்ந்த இவர், 47.5 மில்லிமீற்றர் நீளம், 10 மில்லி மீற்றர் அகலம் மற்றும் 21 மில்லி மீற்றர் உயரத்துடன் உள்ளங்கைக்குள் அடக்கிவிடும் அளவிற்கு மிகச் சிறிய தொலைபேசியைக் கண்டுபிடித்திருக்கிறார். உலகிலேயே மிகச் சிறிய தொலைபேசி இதுதான்.

1976ஆம் ஆண்டு அமெரிக்காவில் இந்தச் சாதனைக்குரிய சிறிய தொல்லைபேசியை குருத்விஷ் கண்டுபிடித்து வெளியிட்டார்.

## நீங்களும் நீந்தலாம்!

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையிலான நாடி நரம்புகளுக்கு எல்லாம் வேலை கொடுத்து இரத்த ஓட்டத்தை நன்கு அதிகரிக்கச் செய்யும். அற்புதமான உடல் பயிற்சியான நீச்சல் கலையை நீங்களும் கற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் இரத்த அழுத்தம் குறையும். சர்க்கரை அளவு கட்டுப் படுத்தப்படும். உடல் ஆரோக்கியமாகவும், மெலிந்து, இளமையாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கும்.

இத்தனை சிறப்பினை தரும் நீச்சல் பயிற்சியினை ஐந்து வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் சகலரும் கற்றுக்கொள்ளலாம். சென்னையைப் பொறுத்தவரை நிறைய இடங்களில் கோடைகால நீச்சல் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு



நீச்சல் பயிற்சி வழங்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நீச்சலில் நல்ல பயிற்சி வழங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் அவர்களுக்கு இலவசமாகவே நீச்சல் பயிற்சி வழங்கப் படுகிறது.

சென்னை மாநகராட்சி கமிஷனர், உதவி கமிஷனர் ஆகியோரின் ஆலோசனை மற்றும் மேற்பார்வையின் கீழ் மெரீனா நீச்சல் குளத்தில் பயிற்சியாளர்களால் சிறந்த முறையில் நீச்சல் பயிற்சி வழங்கப்படுகிறது. இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டவர்களில் திறமையானவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குச் சிறப்பு பயிற்சி வழங்கப்படும்.

கடந்த ஆண்டுகளில் இப்படி சிறப்பு பயிற்சி பெற்றவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளைப் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிசய உலகம்

இறைவனின் படைப்புகளில் இந்த உலகமே அதிசயமான உலகமாக திகழ்கிறது. மனிதர்கள் மட்டுமின்றி விலங்குகள், பறவைகள் போன்ற உயிரினங்களும் பல வண்ணங்கள் பல தோற்றங்களில் காணப் படுகின்றன.

இவை ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாகக் காணப்படுகிறது. இதை ஒரு கவிஞன் பழைய பாடலில் 'பறவைகள் பல விதம் ஒவ்வொன்றும் ஒரு விதம்' என்று பாடியுள்ளார்.

மனிதர்களை எடுத்துக் கொண்டாலும் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறார்கள். நிறங்களால் மாறுபட்டிருந்தாலும் அந்த மனிதர்களில் பலர் உயரமாகவும் பலர் குள்ளமாகவும் இருக்கின்றனர். ஆனாலும் இயல்பான மனிதர்களுக்குரிய குணநலன்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் உணர்வுகள் அந்தக் குள்ளமான மனிதர்களிடம் காணப்படுகிறது.

உதாரணமாக மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள பட்வானி என்ற கிராமத்தில் படு விமரிசையாக ஒரு திருமணம் நடந்தது. அதைப் பார்க்கும்போது அங்குள்ள சிறுவர்களுக்குத் திருமணம் செய்து வைப்பதாகவே நினைக்கத் தோன்றியது. காரணம் திருமணம் செய்துகொண்ட இருவருமே மிகக் குள்ளமாக இருந்ததேயாகும். மணமகன் 2.75 அடி உயரம் மணமகள் 3 அடி உயரம் இருந்தனர். மணமகனின் வயது 24. மணமகளின் வயது 19.

இவர்கள் இருவரும் பட்வானி என்ற கிராமத்தில் வைத்து பொது மக்கள் முன்னிலையில் திருமணம் செய்துகொண்டனர். திருமணத்திற்கு மணமக்களின் உறவினர்கள் மற்றும் உடன் வேலைபார்க்கும் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர். மேலும் ஏராளமானோர்கள் கலந்துகொண்டு அந்தக்குள்ள தம்பதிகளை வரவேற்று வாழ்த்தினர்.

# வெளிநாட்டு வினோதங்கள்




## உயிர் காக்கும் நவீன தொழில்நுட்பம்!

ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு பகுதியில் விஷவாயு தாக்கி பலர் இறக்கின்றனர். போதிய பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாததே இது போன்ற உயிர்ப் பலிகளுக்கு காரணமாகிறது. குறிப்பாக தீயணைப்புத் துறையினர் பலர் தங்கள் பணியின்போது விஷ வாயுத் தாக்குதலுக்கு ஆளாகின்றனர்.

மழை, புயல்களில் சிக்கியவர்களையும், கிணற்றில் விழுந்தவர்களை மீட்கவும், விஷ வாயுவால் திணறுபவர்களைக் காப்பாற்றவும் தீயணைப்பு வீரர்கள் அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் தங்கள் உயிரையும் துச்சமாக மதித்து செயலாற்றில் வருகின்றனர்.

ஆபத்தான மீட்புப் பணிகளில் ஈடுபடும் இவர்களுக்கு உதவும் வகையில் பாயிசானியர்ஸ் காஸ் டிடெக்டர் என்ற விஷ வாயு கண்டுபிடிக்கும் கருவி தரப்பட்டுள்ளது. இந்தக் கருவி மூலம் ஒரு இடத்தில் உயிருக்கு ஆபத்தான வாயு எந்தளவில் உள்ளது என்பதைத் துல்லியமாக அறிய முடியும்.

## பெறுமதி மிக்க கடவுள் சிலைகள்!



வெளிநாட்டுப் பொருட்களின் மோகம் மக்களிடையே அதிகரித்து வருகிறது. இறக்குமதியாகும் உயர் ரக தளபாடங்கள் பயன்பாடு அதிகரித்தாலும், கைவினைப் பொருட்களுக்கு மவுசு குறைய வில்லை. இதனை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடந்த சர்வதேச வீட்டு உபயோகப் பொருட் கள் மற்றும் தளபாடங்கள் கண்காட்சியில் பார்க்க முடந்தது. உயர் ரக தளபாடங்கள் கண்காட்சியில் அதிகமாக இடம்பெற்றிருந்தாலும், வெளிநாட்டவர் உட்பட பலரின் வரவேற்பை பெற்றது. கைவினைப் பொருட்களாலான தளபாடங்கள் மத்திய-அரசின் கைவினைப் பொருட்கள் கழகம் சார்பில் கண்காட்சியில் ஸ்டால் ஒன்று அமைக்கப்பட்டிந்தது. சிவனிடம் விநாயகர் ஞானப் பழம் பெற்ற காட்சியை மையப்படுத்தி வடிவமைக்கப்பட்ட சந்தன மரத்தாலான சிற்பம் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

அதிக வேலைப்பாடுடன் கூடிய இதன் விலை ஆறு இலட்சம் ரூபாய் ரோஸ் உடல் தயாரான காயத்திரி சிலை நான்கரை இலட்ச ரூபாய் மேசை ஊஞ்சல் மற்றும் கதிரைகளில் கலைநேர்த்தியாக வரையப்பட்டிருந்த டிசைன்கள் பார்வையாளர்களை வியக்க வைத்தன.

கண்காட்சியில் பாகிஸ்தான், சீனா, சிங்கப்பூர், இத்தாலி, அவுஸ்திரேலியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் பங்கேற்றன. கதிரைகள், மேசைகள், சோபாக்கள், வேலைப்பாடுடன் கூடிய கதவுகள், சாமி சிலைகள், அலுமாரிகள், ஓவியங்கள் வைக்கப்பட்ட பிரேம்கள் என மரத்தளபாடப் பட்டியல் நீண்டன. என்னதான் ஹைடெக் மரத் தளபாடங்கள் வலம் வந்தாலும் பாரம்பரிய முறையிலான கைவினை மரத்தளபாடங்களுக்கு உள்ள மவுசு குறைய வாய்ப்பில்லை.

# கணனி கல்விப் பகுதி

## இணையம் மூலம் என்னென்ன செய்யலாம்? 03

இணையம் மூலம் பல செயற்பாடுகளை செய்யலாம். உதாரணமாக வானொலி கேட்கலாம். இணையத்திலிருந்தபடியே அமெரிக்காவிலுள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளமுடியும். அதுமட்டுமல்ல எப்படி தோசை சுடுவது என்பதை கூட இணையத்தில் படத்துடன் விளக்கமாக காணலாம். எமக்கு தேவையான சகல தகவலையையும் பெற இணையம் வழி காட்டுகிறது. ஏதாவது ஒன்றைப் பற்றி கட்டுரை எழுத வேண்டுமெனில் இணையத்தை நாடலாம். நாம் ஒரு கணினியை கொள்வனவு செய்வதற்கு முன் இணையத்தில் கணினியின் விலைகளையும் அவற்றின் தரங்கள் என்பவற்றை அறிந்து பின் வாங்கலாம். இணையத்தில் என்ன தகவல் வேணுமென்றாலும் மிகத்துல்லியமாக எடுக்கலாம்.

## இமெயில் அறிமுகம்

### இமயில் உருவான வரலாறு

இமெயில் எனப்படும் மின்னஞ்சல் சேவையை 1971 ம் ஆண்டு அமெரிக்க பொறியிலாளரான ரே டோம்லின்சன் (Ray Tomlinson) அறிமுகப்படுத்தினார். ஆனால் அவர் அனுப்பிய முதல் செய்தி என்ன? யாருக்கு அதை அனுப்பினார்? என்பதை அவராலேயே நினைவுகூர இயலவில்லை. ஆனால் அங்கு ஒரு குறை இருந்தது அதாவது இமெயிலை அனுப்புவோரும் பெறுவோரும் ஒரே வகையான கணினியைப் பெற்றிருந்தால் மட்டுமே அவற்றிலுள்ள அஞ்சல் பெட்டிகள் இயக்கி செய்திப் பரிமாற்றத்தை நடைமுறைப் படுத்தக் கூடியதாக இருந்தது. விரைவில் இக்குறையை டோம்லின்சன் போக்கினார். மேலும் தற்போது அனைவருக்கும் பழக்கமான @ என்ற குறியீட்டைப் பயன்படுத்தி உரியவருக்கு செய்தியை சரியாகச் சேர்ப்பிக்கும் முறையை உருவாக்கியவரும் இவரே. @ என்பதை ஆங்கிலத்தில் at என உச்சரிக்கப்படும்.

1971ம் ஆண்டு மின்னஞ்சல் தோன்றிய போது, அது பெரும் வெற்றியை அளித்தது என்று கூறுவதற்கில்லை. அப்போது சில நூறு பேரே இந்த வசதியைப் பயன்படுத்தினர். மேலும் மின்னஞ்சலை பயன்படுத்த முக்கியமான மொடம் அன்று மிகக் குறைந்த வேகத்திலே இயங்கியதால் மிகச்சிறிய செய்திகளையே அனுப்ப முடிந்தது.

1985ஆம் ஆண்டில் தனியாள் கணினி பயன்பாட்டிற்கு வந்த பின்னரே மக்களும் மாணவர்களும், ஆய்வாளர்களுமாக கோடிக் கணக்கில் மின்னஞ்சலை பயன்படுத்தத் தொடங்கியுனர். 1990ஆம் ஆண்டு வையக விரிவுவலை (World Wide Web) அறிமுகப்படுத்திய பின்பே இணையப் பயனாளர்களும், மின்னஞ்சலை பயன்படுத்துவோரும் பல்கிப் பெருகிவிட்டனர். இணையத்தில் மிகமுக்கிய பயன்பாடாக விளங்குவது மின்னஞ்சல் சேவையே. இதற்குக் காரணம் இதன் விரைவுத் தன்மை, செலவின்மை, நம்பகத்தன்மை ஆகியனவே. கணினி முன்னர் உட்கார்ந்து கொண்டே செய்திகளை அனுப்பவும் பெறவும் இயலும். ஒரே செய்தியை பலருக்கு ஒரே நேரத்தில் எவ்வித கூடுதல் செலவுமின்றி அனுப்ப முடியும்.

மின்னஞ்சல் அதிக வேகத்தில் செல்லுகிறது. ஏன்எனில் சாதாரண அஞ்சல்கள் முயல் வேகத்தில் தான் செல்லுகிறது. அதனால் தான் ஆங்கிலத்தில் சாதாரண அஞ்சலை (Snail Mail) நத்தை மெயில் எனக் கூறுவர். மின்னஞ்சலில் அனுப்ப வேண்டிய செய்தியையும், பெறுனர் மின்னஞ்சல் முகவரியையும் ரைப் செய்த பின்னர் அனுப்பு (Send) என்ற பட்டனைக் கிளிக் செய்ததும் உடனே பெறுனர் முகவரிக்கு செய்தி அனுப்பப்பட்டு விடும்.


டோம்லின்சனின் முயற்சியினால் இணையத்தில் இணைந்துள்ள எக்கணினிக்கும் செய்திகளை பரிமாறுவது எளிதாயிற்று. இதற்கு உதவும் அவரது கண்டுபிடிப்பான @ என்ற குறியீடேயாகும். ஒவ்வொரு நாளும் இணைய உலகில் கோடிக் கணக்கில் மின்னஞ்சல் பலராலும் கையாளப்படுகின்ற தகவல் தொடர்பு சாதனமாக வளர்ந்துள்ளது.

மின்னஞ்சலை உலகின் எந்த மூலைக்கும், யாருக்கு வேண்டுமானாலும், எந்தச் செய்தியை வேண்டுமானாலும், மின்னஞ்சல் வழியே அனுப்பிட முடியும். அதுமட்டுமல்ல புகைப்படங்கள், வீடியோ தகவல்கள், மென்பொருள் மற்றும் ஆவணங்களை இலகுவாக அனுப்பலாம். எவ்வளவு தான் மின்னஞ்சலில் பயன் இருந்தாலும் சில குறைகளும் இல்லாமலில்லை. இது முழுக்க முழுக்க பாதுகாப்பானது, இரகசியத்தை பாதுகாக்கக் கூடியது என்று சொல்வதற்கில்லை. மின்னஞ்சல் வழியே வைரஸ் பரவி எமது கணினியை பாழாக்கும்.

### இமெயில் முகவரி ஒன்றை உருவாக்கும் முறை

இமெயில் சேவையை கட்டணம் செலுத்தியோ அல்லது இலவசமாகவே பெறலாம். எனினும் இலவச இமெயில்கள் தான் மிகவும் பிரபல்யமடைந்து வருகின்றது. அந்த வகையில் இன்று யாகூ, ஜிமெயில் மற்றும் □ாட்மெயில் போன்ற இலவச இமெயில் தளங்கள் பிரசித்தி பெற்றவையாகும்.

இமெயில் சேவையைப் பெற கணினி மற்றும் இணைய இணைப்பு அவசியமாகும். எம்மிடம் சொந்தமாக கணினியோ அல்லது இணைய இணைப்பு இல்லையெனில் கவலை வேண்டாம். உங்கள்




வீட்டிற்கருகிலிருக்கும் இணைய மையத்திற்கு (Netcafe) சென்று இமெயில் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். இலவச இமெயில் முகவரி ஒன்றைப் பெற்றுக் கொள்வது எப்படி எனப்பார்ப்போம்.

வீட்டுக்கணினி என்றால் இன்ரநெற் இணைப்பை ஏற்படுத்தவும். இணைய மையம் என்றால் நேரடியாக இணைய உலாவியான Internet Explorer ஐ இயக்கி அதில் யாகூவின் இணையத்தள முகவரியான www.yahoo.com என்பதை அட்ரஸ் பாரில் ரைப் செய்து Go என்றதை இயக்கியவுடன் யாகூவின் □ோம் பேஜ் லோடாகி வரும் அதிலே காணப்படும் Free Mail க்கு அருகிலிருக்கும் Sign Up ஐக் கிளிக் செய்யவும். தற்போது வரும் வீண்டோவில் Free Mail என்ற கட்டத்தை கிளிக் செய்யவும். இப்பொழுது ஒரு விண்ணப்பபடிவம் ஒன்று தோன்றும் அதை நிரப்பி வீட்டு இறுதியில் காணப்படும் Submit என்பதை கிளிக் செய்த பின்னர் உங்களுக்கு நிரந்தர இமெயில் முகவரி கிடைத்துவிடும். உங்களுடைய பெயரில் ஏற்கனவே வேறொரு இமெயில் முகவரியிருந்தால் மாற்றும்படி மஞ்சள் வர்ணத்தில் தோன்றும். இதை மாற்றிய பின் Submit கொடுக்கவும். நாம் ஒரு முறை இப்படி விண்ணப்பபடிவம் நிரப்பினால் போதும். பின் இமெயில் முகவரி பெற்றபின் பயனாளர் பெயர் மற்றும் பாஸ்வேர்ட் கொடுத்து உள்ளே நுழைந்து இமெயில் அனுப்பலாம் மற்றும் பெறலாம் என்பது குறிப்பிடத்தக்கது. நமது பயனாளர் பெயர் மற்றும் பாஸ்வேர்ட் கொடுத்து உள்ளே செல்வதற்கான இணையத்தள முகவரி : www.mail.yahoo.com என்பதாகும்.




**மின்னஞ்சல் முகவரி** மூன்றே சொற்களில் அடங்மாறு ஒரு மின்னஞ்சல் முகவரி அமையும். உதாரணமாக kt.sarangan@gmail.com என்ற இமெயில் முகவரியில் இரண்டு பகுதிகள் உள்ளன. @ எனும் அடையாளத்திற்கு முன்னும், பின்னும் அவை அமைந்துள்ளன. kt.sarangan என்பது முகவரிக்கு உரியவரின் பெயரைக் குறிக்கும். அதாவது பயனாளர் பெயர் (User Name) ஆகும். yahoo.com என்ற பகுதியில் இரண்டு சொற்கள் உண்டு. அவை மின்னஞ்சல் சேவையை வழங்கும் நிறு வனத்தின் பெயரைக் குறிக்கும்.

## GIT குறிப்புக்கள்

கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டதே பொதுத் தகவல் தொழிலுட்பம் (General Information Technology- GIT). இக்கல்வியானது ஆங்கில மொழி மூலம் நடாத்தப்பட்டு இறுதியில் ஆங்கிலத்திலே பரீட்சை யொன்று நடாத்தப்பட்டும். அதில் சித்தியடைபவர்களுக்கு மட்டுமே சான்றிதழ் வழங் கப்படும் அத்துடன் க.பொ.த(உயர்தர) பரீட்சை பெறுபேற்றுடன் GIT




ன் புள்ளித்தரத்தை இட்டுத் தரப்படும். இக்கல்வியில் அதிக மாணவர்கள் ஆர்வம் செலுத்துவதில்லை. அத்துடன் பாடசாலையில் கணினி வளமும் இக்கல்வியை மேம்படுத்துவதில் தங்கியுள்ளது. GIT பரீட்சை இரு பகுதிகளாக நடாத்தப்படும். அதாவது பகுதி 1, பகுதி 2 என 03 மணி நேர வினாத்தாளாக அமையும்.

பகுதி 1 ல் 40 வினாக்களும் விடைகளும் தரப்படும் அதில் சரியானதைத் தெரிவு செய்ய வேண்டும். 40 புள்ளிகள் பகுதி 1 க்கு வழங்கப்படும். அடுத்து பகுதி 2ல் மொத்தமாக 6 வினாக்கள் தரப்படும். இதில் 04 வினாக்கள் கட்டாயம் செய்ய வேண்டும்.

GIT பாடநெறியில் 6 பிரதான அலகுகளை கொண்டுள்ளது. அவை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

*1. IT Fundamental*- கணினி அடிப்படையை விளக்கும் அலகாக உள்ளது. இவ்அலகை கற்பதற்கு 12 பாடவேளை அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது. கற்பதற்கு இலகுவான அலகு இதுவாகும்.

*2. Mathematics for Computing* - இவ்வலகானது கணித சமன்பாடுகளை கொண்ட அலகானதாகும். இலகுவான சமன்பாடுகளே உள்ளன. அடிப்படை தர்க்க ரீதியான கணித சமன்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. இவ்வலகை கற்பதற்கு 10 பாடவேளை ஒதுக்கப்பட்டுள்ளது.

*3. Computer Programming* - கணினியில் அடிப்படை ப்ரோக்கிராம் மொழியான Pascal ப்ரோக்கிராமை வைத்தே இவ்வலகு வடிவமைக்கப் பட்டுள்ளது. இவ் அலகிற்கு 20 பாடவேளை ஒதுக்கப்பட்டுள்ளது. அதிலே 10 பாடவேளை கணினி செயன்முறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

*4. Use of Computer Software* - இவ்வலகானது கணினியை இயக்கி எமது தேவைகளான கணித வேலைகளைச் செய்வதற்கும், கடிதம் ஒன்றைத் தயாரித்து அதை நகல் (Print) எடுக்கவும், மற்றும் இன்ரநெற், இமெயில் பற்றிய விளக்கங்கள் இவ்வலகிலே உள்ளது. எம். எஸ். ஒபிஸ் என அழைக்கப்படும் கற்கை நெறியை இங்கு போதிக்கப்படும். இவ்வலகை கற்பதற்கு 14 பாடவேளை ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதில் 10 பாடவேளை கணினி செயன் முறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இது மிகமிக இலகுவான அலகு ஆனால் விளங்கிக் கொள்ளவேண்டும்.

(தொடரும்)

கணினிக் கல்விப் பகுதி

கே.ரி.சாரங்கன்
2007 A/L Arts
கொ[illegible] இந்துக் கல்லூரி
Email :kt.sarangan@gmail.com

## மாணவர்களே !

**கணினி சம்பந்தப்பட்ட சந்தேகங்களை பெயர், முகவரியுடன் எமக்கு அனுப்பி வைத்தால் அதற்கு பதிலளிக்க நாம் தயார்ராகவுள்ளோம். கேள்விகள் இன்ரநெற், இமெயில், மற்றும் ஹாட்வெயார், எம் எஸ் ஒபிஸ் சம்பந்தப்பட்டவையாக இருக்க வேண்டும். கணினிக் கல்வி தொடர்பான அபிப்பிராயங்கள் எதிர்பார்க்கப்படுகிறன. தரமானவையாக இருந்தால் கணினிக் கல்விப் பகுதியில் பெயருடன் பிரசுரிக்கப்படும். கணினி சம்பந்தப்பட்ட ஆக்கங்களையும் வலம்புரிக்கு அனுப்பி வைக்கலாம்.**

**உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

**வலம்பரி கணினிக் கல்விப் பகுதி**
**03, இரண்டாம் ஒழுங்கை,**
**பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.**

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை

### அமுதூட்டிய தாய் 32



சிறைச்சாலையில் மண்டேலா

தொண்டர்களே கட்டுப்பாட்டுடன் இருங்கள். பலாத்காரச் செயலில் ஈடுபடாதீர்கள் என்றால் ஈடுபடமால் இருக்கவும் அதேபோன்று தொண்டர்களை வன்முறையில் ஈடுபடுங்கள் என்றால் கொலை, கொள்ளை என்றாலும் சேர்ந்தே நிற்க வேண்டும் என்பது தான் ரேசா ஆற்றிய உரை. இதை வைத்து வன்முறையைத் தூண்டியதற்கான ஆதாரம் காட்டப்பட்டு விட்டதாக அரசு தரப்பு நம்பியது.ஆனால் முன்னும் பின்னும் ஆற்றிய முழு உரையுடன் கேட்டபோது அது ஒரு அழுத்தம் கொடுக்கக் கூறப்பட்ட இரண்டு வரிகள் என்பதும், அவர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் அமைதி வழிக் கொள்கையைத் தான் வலியுறுத்தியிருக்கிறார் என்பதும் தெரிந்தது.

போராளிகள் தரப்பு சாட்சிகள் கூண்டில் ஏறத் தொடங்கின. முதலில் டாக்டர் கோங்கோ ஏற்றப்பட்டார். இவர் விட் பல்கலைக்கழகத்தில் பயின்று வெள்ளையரை விட அதிக மதிப்பெண்களுடன் தேறி புகழ் மிக்க டாக்டராக ஆனவர். இவர் சூலு இன விவசாயி மகன். இவரது வாழ்க்கை விபரங்களைக் கூறியபோது இந்த அளவு அறிவு ஆற்றலைக் கொண்ட மாமனி தர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட இயக்கம் கலவரக் கும்பலாக இருக்கமுடியாது என நீதிபதிகள் நினைப்பது முகத்தில் தெரிந்தது.

இவரையடுத்து தலைவர் லுதுலி சாட்சியம் தந்தார்.

மகாசாசனம் கம்யூனிசத் தன்மை கொண்டது எனவும், ஆபிரிக்க தேசியக் காங்கிரஸில் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பது உண்மையே என அவரது வாயால் சொல்ல வைக்க அரசு பெரும்பாடுபட்டுத் தோற்றது. லுதுலி, நிதானம் தவறாமல் உறுதியாகப் பதில் தந்தார். அமைதி வழிப் போராட்டமே என உறுதிசெய்தார். லுதுலியை தென்னாபிரிக்க மகாத்மா காந்தி என உறுதி செய்தார். லுதுலியை தென்னாபிரிக்க மகாத்மர்காந்தி என மக்கள் அழைத்தனர். லுதுலி சாட்சியம் தொடர்ந்து கொண்டு இருந்த போது 1959மார்ச் 21 அன்று ஆபிரிக்கக் கண்டத்தையே குலுக்கிய பூமி அதிர்ச்சி ஏற்பட்டு விசாரணை நிறுத்தப்பட்டது. பல வாரங்களுக்குப் பின்னர் விசாரணை நடத்தி முடிக்கப்பட்டது.

லுதுலி ஒரு கிறிஸ்துவர் . எனவே எல்லா இனக் குழுக்களையும் ஒருங்கிணைப்பதே ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நோக்கம் என்பதை அவர் விளக்கியது நீதிமன்றத்தைக் கவர்ந்தது போலத் தோன்றியது அவர் விவிலிய மேற்கோள்களைக் காட்டி நீதிபதிகளைத் திணறடித்தார்.

### அனுமதிச் சீட்டு எரிப்பு

1959டிசம்பரில், டர்பனில் கூடிய ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் . மாநாட்டில் , ஆபிரிக்கர்களுக்கான அனுமதிச் சீட்டுப் பெற வேண்டும் என்ற சட்டத்தை எதிர்த்து, அனுமதிச் சீட்டை எரிக்கிற போராட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. இதன்படி 1960 மார்ச் 31 முதல் பல நகரங்கள், கிராமங்களில் அனுமதிச்சீட்டை எரிப்பது, அனுமதிச் சீட்டு வழங்கும் அலுவலகத்தை முற்றுகையிடுவது, இறுதியாக ஜூன் 26ஆம் நாள் பெருமளவில் அனுமதிச் சீட்டுக்களை சொக்கப்பான் கொளுத்தி விடுவது என முடிவெடுத்து அறிவிக்கப்பட்டது.

சுத்த ஆபிரிக்க காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் இல்லாத குழுவாக இயங்கி வந்தனர்.இவர்கள் மார்ச் 21 அன்று அனுமதிச் சீட்டு எரிப்பு போராட்டம் நடக்கும் என அறிவித்தனர். இது மக்களின் உரிமைகளைக் காக்க வேண்டும் என்ற ஆவலில் பிறந்த முழக்கம் அல்ல. ஆபிரிக்கக் காங்கிரஸை முந்திக் காட்ட வேண்டும். இயக்கத்தை , மக்களைப் பிளவு செய்ய வேண்டும் என்ற சந்தர்ப்ப வாத , வாய்ச் சவடால் வேலைதான்.

மார்ச் 21க்கு முன்னர், 17ஆம் திகதி ஆபிரிக்கக் காங்கிரஸையும் போராட்டத்தில் கலந்து கொள்ள சுத்தஆபிரிக்க காங்கிரஸின் தலைவர் சோபுக்வே அழைப்புவிட்டார். இதுவும் கண்துடைப்பு வேலைதான். தேசிய காங்கிரஸ் இதை நிராகரித்தது.

சோபுக்வேயும், நிர்வாகக் குழு உறுப்பினர்களும் ஆர்லண்டோவிலிருந்த அனுமதிச்சீட்டு வழங்கும் அலுவலகத்திற்குச் சென்று மறியல் செய்து கைதாகினர். அதே தினத்தில் பல நகரங்களில் இவர்களது போராட்டத்திற்கு மக்கள் திரளவில்லை.

சோபுக்வே கைதுசெய்யப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில், "நாங்கள் வாதிடமாட்டோம். ஜாமீன் கேட்கமாட்டோம். அபராதம் கட்டமாட்டோம்" எனக் கூறினார். நீதி மன்றம் ஓரிரு வார தண்டனை வழங்கும் என அவர் எதிர்பார்த்தார். ஆனால் மூன்றாண்டுத் தண்டனை வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பல ஊர்களில் கண்டன மறியல் நடந்தது. இதில் தொழிலாளர்கள் நிறைந்த சார்ப்பவிள்ளையில் பல்லாயிரம் பேர் திரண்டனர். காவல் நிலையத்தில் 75பேர் தான் இருந்தனர். அவர்கட்கு மக்களைக் கண்டு பயம். எனவே முன் அறிவிப்பு இன்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.அறுபத்தி ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.700பேர் படுகாயம் அடைந்தனர். முதல் தடவையாக அமெரிக்க அரசும் இந்தக் காட்டுமிராண்டிச் செயலைக் கண்டித்தது. ஐ.நா. பாதுகாப்பு சபையும் கண்டித்தது. இங்கிலாந்தின் பிரதமர் மாக் மில்லன், ஆபிரிக்காவில் புதுக் காற்று திசைமாறி வீசுவதாக வருணித்தார்.இந்த நிகழ்ச்சிகளை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பார்த்துக்கொண்டு இருக்கமுடியுமா ? தொடங் கியது. வேறு ஒரு கட்சியாக இருந்தாலும் படுதுயருக்கு ஆளானவர்கள் மக்காளயிற்றே! எனவே ஆபிரிக்க காங்கிரஸின் தலைவர்கள் கூடி விவாதித்தனர்.

போராட்டத்தை தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டது. மார்ச் 26ஆம் நாளன்று தலைவர் லுதுலி அனுமதிச் சீட்டை பிரிட்டோரியாவில் எரித்தார். ஆயிரக்கணக்கில் அனுமதிச் சீட்டுக்கள் கொளுத்தப்பட்டன. கேப் நகரத்தில் ஐம்பதாயிரம் மக்கள் கண்டனப் பேரணியில் திரண்டனர். நாடு முழுவதும் கோபத்தீ கொளுந்து விட்டெரிந்தது. இத்தகைய மக்கள் எழுச்சியை நாடு பூராவிலும் அமைப்பு வடிவில் இயங்கிய ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸினால் தான் செய்ய முடியும் என்பது புலனாயிற்றே.

அரசோ நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்தது. நள்ளிரவில் மண்டேலா கைதானார். காவல் நிலையம் சென்றபோது அங்கு ஏற்கனவே பல சக போராளிகள் கைதாகியிருந்தனர்.

ஒரு சிறிய அறையில் பலரையும் போட்டு அடைத்தனர். விரிப்பு, குடிதண்ணீர் , கழிவறை எதுவும் கொடுக்கப்படவில்லை. உணவும் தரப்படவில்லை. தரப்பட்ட கம்பளியில் காய்ந்து உறைந்த ரத்தம், வாந்தியெடுத்த வடுக்கள்... வருணிக்க முடியாத நாற்றம்.அசிங்கங்கள். எல்லோரும் அறைக்கு வெளியில் வந்து நின்றிருந்தனர். ஒரு சிறை அதிகாரி, உள்ளே போகாவிட்டால் சுட்டுத் தள்ளப் போவதாக உறுமினான். யாரும் அசையவில்லை. சார்ப்பவிள்ளைக்குப் பின் அது வெறும் மிரட்டல் அல்ல என்பதும் தெரியும். மண்டேலா கால்சட்டைப் பைகளுக்குள் கைகளை விட்ட வண்ணம் நின்றிருந்தார். கமாண்டர் கோபத்தோடு வந்து "ஒரு அதிகாரி முன்னால் கையைப் பைக்குள் போட்டா நிற்கிறாய்! எடு" எனக் கத்தினான்.

"சாப்பாடு வந்தால் த சாப்பிட மட்டும் கையை எடுப்பேன் அதுவரை அவை அங்கே தான் இருக்கும்" என்றார் மண்டேலா.சிறிதுநேரம் கழிந்து சோளக்கூழ் வந்தது. அதைக் கொண்டு வந்த பாத்திரம் அழுக்கேறி இருந்தது. பார்க்கவே அருவருப்பு.இருந்தாலும் பசியாக இருந்ததால் எல்லோரும் சாப்பிட்டார்கள்.நள்ளிரவு ஒரு மணிக்கு ஒரு அதிகாரி வந்து, கொட்டிக் கதவைத் திறந்து முன் பக்க வாசலுக்குப் போகச் சொன்னார். ஒரு அதிகாரி உனக்கு விடுதலை என்பார். (தொடரும்)

# யாழ். பல்கலைக்கழக திருப்பள்ளி எழுச்சி

பொன்னம் பலம் மகனார்
புகழ் சேர் இராமநாதன்
உயிலெழுதித்தந்த காணியுடன்
பரமேஸ்வராக் கல்லூரியில்
குடிகொண்ட யாழ். பல்கலைக்கழகமே
பேராளர் பேரறிஞர் கூடி நிற்கும்
எங்கள் கல்விக் கலா பீடமே
பள்ளி எழுந்தருளாயே!

★ ★ ★

படித்தவர் தூங்கி விட்டார்
பரீட்சைகள் இல்லாமல்
எக்ஸாம் எழுதியவர் ஏங்குகிறார்
பெறுபேறு வெளிவராமல்
துணைவேந்தர் துணையின்றி தூங்குகின்ற
யாழ். பல்கலைக் கழகமே
பதிவாளர் துணைகொண்டேனும்
பள்ளி எழுந்தருளாயே!

★ ★ ★

பணிபெற்றார் படியிழந்தார்
பதவியிலே இருப்பவரோ
துணைவேந்தர் இல்லையென்றார்
நிதி நலன் பேணுபவரோ
கொண்டுவா "காடர் "என்றார்
எம்ஆர்ரிசி ( MRTC ) வளர்
யாழ். பல்கலைக்கழகமே பாங்குடனே
பள்ளி எழுந்தருளாயே!

★ ★ ★

கூவின சேவல்கள் ! குஞ்சுகள் சிறகின !
வீசின சோழகக் காற்றுக்கள்
தணிந்தன வெப்பங்கள்
தரணி தண்மையும் பெற்றன
கூலாகி வந்த பெயர் கொட்டாகிப் போக
வெம்பியோ உறங்குகிறாய் எம் தாயே !
யாழ் .பல்கலைக் கழகமே
பள்ளி எழுந்தருளாயே!

★ ★ ★

மூதவையும் பேரவையும்
முறையாகக் கூடவில்லை
இடையே வந்த பதில் துணைவேந்தர்
தொழிற்சங்கத்தார் துணைபுரிய
சொல்லாமல் போனாரோ
செல்வமகளே! எத்தனை சோகம் உனக்கு
யாழ் . பல்கலைக் கழகத் தாயே !
விடியலுக்காய் பள்ளி எழுந்தருளாயே!

★ ★ ★

வித்தியர் துரையர் குணத்தார்.
நித்தமும் உன் வாசல் வரும்
பாலசுந்தரம்பிள்ளையர்
மெத்தமாய் இருந்து விட்டுப்போன
மோகனதாஸ் அத்தனைபேரும்
துணை (வேந்தர்) நிற்க! துணையின்றி
உறங்கலாமோ யாழ் .பல்கலைக்கழகமே
பள்ளி எழுந்தருளாயே!

★ ★ ★

கந்தசாமியொடு குமாரவடிவேலும் புடை சூழ.
பிறையணி சிவாவுடன் திருமகனார்
தேவாவும் உலா வர
மருத்துவர் சிவபாலனுடன்
வேளாண் செய் இராசதுரையும் கூடி
பீடாதிபதிகள் பெயர் சொல்ல
தூங்குகின்றயாழ். பல்கலைக்கழகமே
பள்ளி எழுந்தருளாயே !

★ ★ ★

கட்டிய கொடும்பாவிகள் எரிந்தன !
ஒட்டிய துண்டுகள் கிழிந்தன!
போட்ட கோஷங்கள் தணிந்தன!
வென்ற துணைவேந்தரும் வெளிநாடு சென்றார்
இன்னமும் ஏன் உறக்கம்
புதியவர் துணைகொண்டு
யாழ். பல்கலைக்கழகமே
பள்ளி எழுந்தருளாயே!

ஆதித்த சுவாமிகள்

மனிதர்களை இழிவாக நடத்த நாம் முற் பட்டால் -பகுத்தறிவும் கருணையும் நம்மிடம் இல்லை யென்றால் நம்மை மட்டுமல்ல கடவுளையே அவமதிப்பவர்களாகின்றோம்

- டாக்டர் ராதாகிருஷ்ணன்

வலம்புரி

# தமிழ்மக்கள் என்பதற்காகவா ? இத்தனை சோதனைக் கெடுபிடிகள்

யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள சூழ்நிலை மக்களைப் பெரும் அச்சநிலைக்கு ஆளாக்கி யுள்ளது.

எங்கு பார்த்தாலும் ஆயுதங்களை ஏந்திய படையினர் - எந்நேரமும் அவர்களின் துப் பாக்கிகள் தமிழ்மக்களின் உயிர்களை காவு கொள்ளக்காத்திருக்கின்றது.

இதனிடையே மூலைக்கு மூலை இராணு வத்தினர் நடாத்தும் சோதனைக் கெடுபிடிகள் மிகவும் மோசமானது.

வயது, பால், தொழில் வேறுபாடின்றி எல் லோரையும் வீதியில் சோதனை நடத்துவது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

அப்பாவித் தமிழ் மக்களை வீதியில் மறித்து சோதனை நடத்துவதன் ஊடாக படையினர் சாதித்ததுதான் என்ன?

பட்டப் பகலில் படையினரின் காவலரணுக்கு அருகில் நின்று கைக்குண்டை வீசிவிட்டு போகிறபோது ஓடிஒளித்து விட்டு எல்லாம் முடிந்த பின்னர் வெளியில் வந்து அப்பாவிப் பொதுமக்களை மறித்து சோதிப்பது, அவர்க ளைத் தாக்குவது இவை அனைத்தும் இய லாமையின் வெளிப்பாடாகும்.

பொதுமக்களை சோதனை நடத்துவதென் பது,படையினரின் கடமைஎன வாதிக்கப்பட் டால் சோதிப்பதற்கும் ஓர் முறைமை உண்டென் பதையும் மறுப்பதற்கில்லை.

பொதுமக்களை வீதிஓரங்களில் மறித்து, கைகளை உயர்த்துமாறு பணித்து, சோதிப்ப தைப்பார்க்கும்போது அவர்களின் மன நிலை எப்படி இருக்கும் என்பதை படைத்தளபதிகள் ஒருகணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

'நாம் தமிழர்கள் என்பதற்காகவா இந் நிலை'.

தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மீது இப்படி ஒரு சோதனை நடக்குமா? எங்களின் பூர்வீக மண்ணில் அரச படைகள் நடந்து கொள்ளும் முறைமையானது, எங்களுக் கொரு நாடுதேவை என்பதையல்லவா? மீள வலியுறுத்துகின்றது.

இந்த நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டு மாயின் முதலில் மக்களின் மனநிலையை வெல்லவேண்டும்.

இதைவிடுத்து மக்களைத் துன்புறுத்துவது, அவர்களைத்தாக்குவது, சோதனைக்கெடு பிடிகளை நடத்துவது இவை யாவுமே படையி னர் மீதான வெறுப்பையே ஏற்படுத்தும்.

சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் சிலர் மக்களுடன் குறிப்பாக பெண் பிள்ளைகளுடன் நடந்துகொள்ளும் முறைமை அவ்வளவு நல்லதாக இல்லை.

எனவே தேவையற்ற வகையில் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் சோதனைக் கெடுபிடிகளை நிறுத்துவது படையினரின் முதற்கடமையாகும்.

# தொலைக்காட்சி உரையில் திருமலை படுகொலை குறித்து ஏன் பேசவில்லை?

## ரவிராஜ் எம்.பி. கேள்வி



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் தொலைக்காட்சி யில் உரையாற்றுகை யில் திருமலை தமி ழர் வர்த்தக நிலை யங்கள் தீக்கிரை யாக் கப்பட்ட சம்பவம் குறி த்து ஏன் பேசவில் லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கேள்வி எழுப்பியுள் ளார். இது தொடர்பாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன் றுக்கு அவர் அளித்த நேர்காணலில்,

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் தற்கொலைப் போராளி கள் இருக்கிறார்கள் தான் . ஆனால் கொழும்பில் மிகவும் பாதுகாப்பு வாய்ந்த இராணுவப் பிரதேசத்துக்குள் எப்படி நுழைந்துதாக் குதல் நடத்த முடியும்?

யுத்த நிறுத்த காலத்தில் தான் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடு துணைவேந்தர் மீது தாக்குதல் மற்றும் துணை இராணுவக் குழுவினரது நடவடிக் கைகள் எல்லா மே அதிகரித்தன.

ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னர் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். திருகோண மலையில் விக்னேஸ்வரன் படு கொலை செய்யப்பட்டதைத் தொ டர்ந்து நான் தாக்கப்பட்டேன்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு இராணுவ அமைப்பு. அவர்களது துப்பாக்கி முனைகள் எப் போதும் தயாராக இருக்கும். விடுதலைப்புலிகள் வலுவானவர்களாகவும் மக்க ளின் நலன்களைக் காப்பவர்களாகவும் இருப்பதாக மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். நான் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பில் இருந்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகள் தான் வடக்கு கிழக்கு தமிழர்களின் பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

திருகோணமலையில் 35 தமிழரது வர்த்தக நிறுவனங் கள் தீக்கிரையாக்கப்பட்டன. ஆனால் நாட்டு மக்களுக்கு தொலைக்காட் சியில் உரையாற்றுகின்ற ஜனாதி பதியும் முப்படைகளில் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ அது குறித்து ஏன் வாய் திறக்கவில்லை? தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே போருக்குத் தயாரான நிலையில்தான் உள்ளனர். அவர்கள் அரசியல் தத்துவத்தோடு உள்ள இராணுவ அமைப்பு. ஜெனீவாப்பேச் சுக்களுக்குப்பின்னா் பல ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் கூட விடுதலைப்புலிகள் அதற்கு எதிர் வினையாற்ற வில் லை. கடந்த 4மாதங்களாக பொதுமக்களின் வாழ்க்கை மிக வும் பாதிக்கப்பட்டுள்ளது. இப் போது நாடு போர் முனையில் நிற்கின்றது. இந்த நிலை மைக்கு எல்லாம் அரசாங்கமும் அரச படையின்ரும் தான் காரணம் என்றார். (க)

## துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி

திருகோணமலை ஹெப்பட்டிக்கொலாவ தல்கானைப்பிரதே சத்தில் மணல் அகழச் சென்ற பொதுமக்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியாகியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முற் பகல் 9.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது. இதன்போது மேலும் இருவர் காயமடைந்தனர். இவர்கள் அநுராதபுரம் வைத்தியாசலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-9)

# கொக்குத் தொடுவாயில் தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் கொக்கிளாய் மற்றும் கொக்குத் தொடு வாய் ஆகிய இடங்களில் அமைந்திருக்கின்ற இராணுவத்தி னரின் முகாம்களின் மீது படகுகளில் வந்த விடுதலைப்புலி கள் தாக்குதல் நடாத்தியதாக இராணுவ வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

அதனையடுத்து தாம் திருப்பித் தாக்கியதாகவும் தற்போது நிலைமைகட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் இம்மோதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் எவையும் உடனடியாகத் தெரிய வரவில்லை எனவும் இராணுவ அதிகாரியொருவர் தெரி வித்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் நள்ளிரவு வரை தாக்குதல் கள் தொடர்ந்து இடம்பெறுவதாக விடுதலைப் புலிகள் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை கொக்கிளாய்ப் பதியில் இடம்பெற்ற மோதல் சம்ப வத்தையடுத்து பல நூற்றுக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து திரு மலைமாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் ஒன் றான புல்மோட்டையில் தங்கியுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர். (ச-4)

# புதிய சம்பளத்திட்டம் ஜனவரி முதல் வழங்கப்படும்

(கொழும்பு)

புதிய சம்பள சுற்றறிக்கைக்கு அமைவான சம்பள அள வுத்திட்டம் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலாகும் வரையில் நடைமுறைப்படுத்தப்படுவதாக பொதுநிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

அரச ஊழியர்களுக்கான நிலுவைத்தொகை, படியேற் றங்கள் ஆகியன இம் மாதம் சம்பளத்துடன் வழங்கப்படு மென அமைச்சின் செயலாளர் டி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கடந்த வரவு - செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு அனுகூலங்களை வழங்க யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

புதிய சம்பள சுற்றறிக்கையின் பிரகாரம் இந்தச் சலுகைகள் உள்ளடங்களாக ஆக்ககுறைந்த திரட்டிய சம்பளம் மாதம் ஒன்றுக்கு 7 ஆயிரத்து 900 ரூபாவிலிருந்து 11 ஆயிரத்து 730 ரூபாவாக அதிகரிக்கப்பட் டுள்ளது.

தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழு புதிய சுற்ற றிக்கையை சமர்ப்பித்திருந்தது இதன் பிரகாரம் அதிகரிக் கப்படும் சம்பளக் கொடுப்பனவுக்கு அமைவாக மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுகள், விடுமுறைக் கொடுப்பனவுக ளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக திஸநாயக்க மேலும் தெரி வித்தார். (க-7)

# கடல் எல்லையை மறுசீரமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாரா நிறுவனம் இலங்கையின் கடல் எல்லையை நிர்ணயிக்கும் செயல் திட்டமொன்றை அமுல் படுத்தியுள் ளது. இதற்கென 64 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நடை முறைப்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் மூலம் இலங்கைக் கான கடல் எல்லை மறுசீரமைக்கப்படும்.

இதேவேளை கடற்தொழில் மற்றும் நீரியல் வள அமைச் சின் செயலாளர் ஜி.ஜெனதாஸ இது பற்றிக் கூறுகையில்,

இத்திட்டத்தை 4 வருடத்துக்குள் பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்துள்ளதாகத் தெரிவித்தார். இந்தத் திட்டத்தின் 25 சதவீதமான செயற்பாடுகள் ஏற்கனவே முடிவடைந்துள்ள தாக அவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச சமுத்திர சட்டங்களுக்கமைய கடற்பிரதேச உரி மையை பெற்றுக்கொள்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். உரிய முறையில் கடல் எல்லை நிர்ணயிக்கப்படாதன் கார ணமாகவே மீனவர்கள் கைது செய்யப்படுதல் போன்ற சம்ப வங்கள் இடம்பெறுகின்றன.

சர்வதேச சமுத்திர சட்டங்க ளுக்கமைய நடைமுறைபடுத் தப்படும் இந்தத் திட்டத்தால் எதிர்காலத்தில் அசௌகாரி யங்களை குறைத்துக்கொள்ள முடியுமென்றும் அமைச் சின் செயலாளர் தெரிவித்தார். (க-7)


## அமைச்சர் மங்கள அடுத்த வாரம் இந்தியா செல்வார்

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர எதிர்வரும் 8ஆம் திகதி இந்தியாவிற்குப் பயணஞ் செய்யவுள்ளார்.

அங்கு 2 நாட்கள் தங்கியிருக்கும் அவர் இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் உள்ளிட்ட இந்திய அரச அதிகாரிகளுடன் ஆலோ சனை நடத்தவுள்ளார். இலங்கை வன்முறைகள் குறித் தும், அமைதி முயற்சிகள் குறித்தும் இந்தியத் தரப்புக்கு மங் கள சமரவீர விளக்கம் அளிக்கவுள்ளார்.

அரசியல் ரீதியாக இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும் என்றும், வன்முறைகளை கைவிட விடு தலைப்புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என் றும் இச்சந்திப்பில் மங்கள சமரவீர வலியுறுத்தக்கூடும் என் றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



அடுத்தவருக்கோ பிற உயிருக்கோ தன்னால் துன்பமோ பிரச்சினையோ இல்லாமல் தன் கடமை யைச் செய்து பிறர் வாழச்செய்வது அற வாழ்க்கை யாகும். இதை வழுவாது பின்பற்றி வாழ்ந்தால் நிலையற்ற வாழ்வில் நிலைத்த இறைவன் கிட்டு வான். அறமும் தெய்வ பக்தியும் இல்லாதவர்களை பூமிக்கு பாரம் என்றே சொல்ல வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

# இராணுவத்தையும் பொலிஸாரையும் புலிகள் விலைக்கு வாங்கிவிட்டனர்

## பாதுகாப்பு ஆலோசகர் கொட்டகதெனியர் கூறுகிறார்

(கொழும்பு)

இராணுவம் மற்றும் பொலிஸில் உள்ள பலரையும் தமிழீழ விடுதலைப்புலிகள் விலைக்கு வாங்கி விட்டனர். இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு ஆலோசகர் எச்.எம்.ஜி.பி.கொட்டகதெனிய கூறியுள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றிற்கு அவர் அளித்துள்ள நேர்காணலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அவிசாவளையில் ஐந்து தமிழர்களின் தலை துண்டிக்கப்பட்டதாக கூறுகிறீர்கள் பாதாள உலகக்குழுவைச் சேர்ந்த பலரும் தான் பொலிஸாருடனான மோதலில் கொல்லப்படுகின்றனர்.

தடய அறிவியல் சோதனை முடிபுகள் எதுவும் வெளிவராத நிலையில் அந்த உடல்கள் தமிழர்களினதுதான் என்று எப்படி முடிபுக்கு வரமுடியும்?. அரச படைகள் மிகுந்த ஒழுக்கத்தோடு இயங்குகின்றன.விடுதலைப்புலிகளால் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அரச படைகள் பொறுமை காக்கின்றன.

ஆனால், போர்ச்சூழலில் எமது தற்காப்புக்கான தாக்குதல்களை நாம் நடத்தவேண்டியுள்ளது. இங்கிலாந்து போன்ற நாடுகளில் குண்டு வெடிப்பு நடந்தபோது எவ்வித உத்தரவிற்கும் காத்திராமல் படையினர் சந்தேக நபர்களை சுட்டுக்கொன்றார்கள்.

இந் நாட்டில் உள்ள அரச சார்பற்ற நிறுவன முகவர்கள்,ஊடகங்கள் ஆகியவை விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு நாட்டை பிளவுபடுத்துகின்றன. இந்த நாட்டினது இறையாண்மையைப் பாதுகாக்க வேண்டியது அரச படைகளின் கடமை.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினால் பயங்கரவாத அமைப்பின் 'நிழல் அரசாங்கத்திற்கு' அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.பயங்கரவாத இயக்கத்தை சர்வதேச சமூகம் ஆதரிக்கிறது. சிறிலங்கா இராணுவத்தளபதி மீது தாக்குதல் நடத்திய தற்கொலைதாரி கொழும்பில் பல மாதங்களாக தங்கியுள்ளார்.

ஆனால் நாங்கள் விடுதிகளில் சோதனை நடத்தினால் தமிழர்களின் உரிமையை மறுப்பதாக தமிழ் அரசியல்வாதிகள் கூறுகின்றனர். ஜெனீவாவில் ஒரு மாதத்திற்கு முன்பாக அரச படைகள் மீது எதுவித தாக்குதலையும் மேற்கொள்ள மாட்டோம் என்று விடுதலைப்புலிகள் ஒப்புக்கொண்டிருந்த நிலையில் இராணுவத்தளபதி மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நாங்கள் பயங்கரவாத இயக்கத்தை கையாள எமக்கு மேலதிக அதிகாரங்கள் தேவை அரசாங்கத்தின் எதிரிகளால் முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்களை மக்கள் நிராகரிப்பார்கள். யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின்னர் கொழும்பின் அனைத்துப் பகுதிகளிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளனர்.

விடுதலைப்புலிகள் பலமாக ஊடுருவி இருப்பதாக அனைவரும் உணருகின்றனர். தமிழீழ விடுதலைப்புலிளுக்கு எதிராக எந்தவொரு தமிழரும் வாயைத்திறந்து தகவல் கொடுப்பதில்லை.

கொழும்பில் உள்ள அதிகாரம் மிக்க சக்திகளால் விடுதலைப்புலிகள் பாதுகாக்கப்படுகின்றனர் என்பது அவர்களுக்குத்தெரியும். பொலிஸிலும் இராணுவத்திலும் நிறையப்பேரை விடுதலைப்புலிகள் விலைக்கு வாங்கியுள்ளனர்.

இராணுவத்தளபதி மீதான தாக்குதல் என்பது இராணுவத்தில் உள்ளே உள்ள சிலரது ஒத்துழைப்புடனேயே நடந்ததென்பதை உறுதியாக நான் கூறுவேன். இவ்வாறு அந்தப்பேட்டியில் கொட்டகதெனியா தெரிவித்துள்ளார். (ந)

## வன்னிப்பகுதியில் மே தினம் மகிந்தவின் கொடும்பாவி எரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற மே தின நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பேரினவாதிகளின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் மே தினப்பேரணி தொடங்கியது. பெருமளவானோர் கலந்து கொண்ட இப் பேரணியில் பறை வாத்தியத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச உட்பட்டவர்களின் கொடும்பாவிகள் வீதியில் இழுத்துவரப்பட்டன.

பின்னர் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மேதின நிகழ்வுகள் நடைபெற்றன. தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா ஏற்றினார்.

தூயவன் அரசறிவியற் கல்லூரி முதல்வர் அரசண்ணா சிறப்புரை நிகழ்த்தினார். மகிந்த ராஜபக்ஷ மற்றும் விமல்வீரவன்ச கொடும்பாவிகள் மக்களால் எரியூட்டி அழிக்கப்பட்டன.

இதேபோல் முல்லைத்தீவு மாவட்ட மே தின நிகழ்வு புதுக்குடியிருப்பில் நடைபெற்றது. (ந)

## காவலூரில் சாரதி, நடத்துநர் படையினரால் தாக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை சாரதியும் நடத்துநரும் ஊர்காவற்றுறையில் வைத்து படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது. படையினரின் தாக்குதலுக்கு இலக்கான பஸ் சாரதி வி.சபாநாயகராசா (வயது 46) நடத்துநர் கி.பிரபாகரன் (வயது 36) ஆகியோர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தைக் கண்டித்து நேற்றைய தினம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த சாரதிகளும் நடத்துநர்களும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து யாழ்.அரச அதிபருடன் இடம்பெற்ற சந்திப்பையடுத்து பிற்பகல் 3 மணியில் இருந்து போக்குவரத்துச் சேவைகள் வழமைக்குத் திரும்பின. (ந-132,133,15)

## கள்ளுத்தவறணையில் வாக்குவாதம் மருமகன் தாக்கியதில் மாமன் பலி

### மந்துவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கள்ளுத்தவறணையில் மாமன் மருமகனுக்கிடையே எழுந்த வாய்த்தர்க்கத்தைத் தொடர்ந்து மருமகன் தாக்கியதில் மாமன் உயிரிழந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இச் சம்பவத்தில் மந்துவில் கிழக்கைச்சேர்ந்த வேலன் நடராசா (வயது 55) என்பவரே மரணமடைந்தவராவார்.

இவர்கள் இருவரும் கள்ளுத்தவறணையில் கள் அருந்திக்கொண்டிருந்தபோது இருவருக்குமிடையில் எழுந்த வாய்த்தர்க்கத்தைத் தொடர்ந்து மருமகன் மாமனைத் தாக்கி பின்நோக்கித் தள்ளி விட்டதாகவும் பிடரி அடியுண்ட நிலையில் வீழ்ந்த மாமன் தலைப்பகுதியில் காயங்களுடன் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் பிரஸ்தாப நபர் நேற்று உயிரிழந்தார்.

பிரஸ்தாப நபரின் மருமகன் கொடிகாமம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். வைத்தியசாலைக்குச் சென்று சடலத்தைப்பார்வையிட்ட சாவகச்சேரி நீதிவான் அ.பிறேம்சங்கர் பிரேத பரிசோதனைக்கு பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ந-5,132,133)

### படைத்தரப்பில்...

கூறியிருந்தோம் அரசாங்கத்தின் சில சக்திகள் மீது குற்றஞ்சுமத்துவதால் அது விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பில் நாம் கவலை கொள்ளவில்லை என்பது பொருளல்ல என்றும் அவர் கூறினார்.(ந-4)

### அல்லைப்பிட்டியில்...

இச் சம்பவம் தொடர்பாக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற் கொண்டுள்ளார். இவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (க-15)

## சுப்பிரமணியம் பூங்கா நாளை திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை, புனர்வாழ்வு அமைச்சு, யுனிசெவ் நிறுவனம் என்பவற்றின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ்.சுப்பிரமணியம் பூங்கா நாளை புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் வைபவரீதியாக திறந்து வைக்கப்படும்.

இப் பூங்கா அரசாங்க அதிபர் கே.கணேஸ் அவர்களால் திறந்து வைக்கப் படவுள்ளது. நிகழ்விற்கு யாழ்.மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமை வகிப்பார். (க-9)


கலாலயா

பயிற்சியகம்

மணிக்கூட்டுவீதி,யாழ்ப்பாணம்

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித ஒரு மாத / மூன்று மாதப் பயிற்சிகள்

- கேக் ஐஸிங்,உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம் ,FABRIC PAINTING பூவேலை, கைவேலை.
- அடிப்படைத் தையல் தெரிந்தவர்களுக்கான சாறி பிளவுஸ் தைக்கும் முறை
- அடிப்படை FACIAL மற்றும் மணமகள் அலங்காரங்கள்
- 6மாத கால தையற்கலை.

புதிய சனி,ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் 07.05.2006

புதிய கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம் 10.05.2006

(316)

மேலும் விபரங்களை தினமும் பி.ப. 2மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.








இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 02.05.2006 இல் அச்சிட்டுவெளியிட்டப்பட்டது.